## உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர்,
## கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் நடவடிக்கைகள்

**முன்னிலை: திரு இரா.வாழவந்தான், பி.இ.,**

**திட்ட அனுமதி**

**நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ்**

**ந.க.எண். 6661/2018/உதிகு** **நாள்: 15.07.2021**

**திட்ட அனுமதி எண். 265/2021**

**உள்ளாட்சியின் பெயர்:** கண்ணம்பாளையம் பேரூராட்சி

பொருள் : **திட்ட அனுமதி – குடியிருப்பு மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் - கோயம்புத்தூர் மாவட்டம் - சூலூர் வட்டம் - கண்ணம்பாளையம் பேரூராட்சி மற்றும் கிராமம் - க.ச.எண். 123A & 124/2-ல் 12.31 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு திட்ட அனுமதி வழங்குதல் - தொடர்பாக.**

பார்வை :

1. மனுதாரர் திரு. M. சுப்பிரமணியன் M/s. VIP Estate LLP அவர்கள் விண்ணப்பம் நாள் இல்லை இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள். 26.12.2018.
2. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் 08.01.2019 (நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களுக்கு முகவரியிட்டது)
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் மூலம் சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதலளிக்கப்பட்டது ந.க.எண் 966/2019/TCP-3, நாள் 21.01.2021
4. மனுதாரர் திரு. M. சுப்ரமணியன் M/s. VIP Estates LLP சாலை மற்றும் பொது ஒதுக்கீடு உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்து சமர்பிக்கப்பட்ட நாள் 03.05.2021.
5. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் மூலம் மனைபிரிவிற்கான இசைவு ஒப்புதலளிக்கப்பட்டது ந.க.எண் 966/2019/TCP-3, நாள் 04.05.2021
6. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 19766/2020போ. நாள் 24.12.2020
7. அரசாணை எண் 138 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 04.06.2004.
8. அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020.
9. அரசாணை எண் 141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை UD4(3) நாள் 23.09.2020.
10. அரசாணை எண் 181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை UD4(1) நாள் 09.12.2020.
11. அரசு கடிதம் எண் 19113/நவ4(3)/2017-1 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 30.08.2017.
12. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 13686/2017/LA1 நாள் 08.09.2017.

13. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மானம் எண். 33 நாள் 04.11.2020.
14. வழக்கறிஞர் திரு. M. முத்துகுமார் கோயம்புத்தூர் நாள் 28.04.2021
15. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் 05.07.2021 (கட்டணம் கோரப்பட்டது)
16. மனுதாரர் கட்டணம் செலுத்தி பெறப்பட்ட நாள் 09.07.2021

**உத்தரவு:**

பார்வை 1-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 2-ல் சுட்டிய இவ்வலுவலக மூலம் நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. பார்வை 3-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. அதனையடுத்து பார்வை 4ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானப்பத்திர எண். 6064/2021 & 6065/2021 ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களுக்கு மனுதாரர் மூலம் சமர்ப்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பார்வை 5-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் மூலம் மனைபிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டதனை தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது.

1. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம், கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், கண்ணம்பாளையம் பேரூராட்சி மற்றும் கிராமம், க.ச.எண். 123A & 124/2-ல் 12.31 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு, உள்ளூர் திட்டக்குழும தீர்மானத்தின்படியும், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளின்படி ம.வ./ந.ஊ.இ எண் : **107/2021** என்ற எண்ணில் குடியிருப்பு மனைபிரிவு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

   ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள வரைபடத்திற்கு திட்ட அனுமதி எண் 265/2021 என்ற எண்ணில் திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

2. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண் 9(ஆ)-ன்படி அவ்வாணையில் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும் நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

4. செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5. உத்தேச மனைப்பிரிவில் தார்சாலை, மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள், மற்றும் தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் தகுதிக்கேற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

**சிறப்பு நிபந்தனை-1**

1 (a) பார்வை 10-ல் கண்டுள்ள அரசாணை மற்றும் பார்வை 6-ல் கண்டுள்ள TNCDBR-2019 விதி எண் 47 (11)-ன்படியும் மாநகராட்சி, நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenties like roads, storm water drains and street lights from the applicants" After collecting the necessary fees the final layout sketch, permit of Planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

(b) "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body"

2 (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் (EWS) மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண் 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 31.01.2020-ன்படி (EWS) மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3 பார்வை 11 மற்றும் 12-ல் கண்டுள்ள அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4 The Tamil Nadu Government in G.O.Ms No. 112. Housing and Urban Development Department Dated. 22.06.2017 has approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be. in any Real Estate Project or Part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. பார்வை 14-ல் காணும் வழக்கறிஞர் திரு. M. முத்துகுமார் B.A BL கோயம்புத்தூர் அவர்களின் கடிதத்தில் இம்மனைபிரிவில் திருமதி R.புஷ்பலதா அவர்களின் நிலம் 0.17 செண்ட் ஆக்கிரமிக்க முயற்சி செய்து மனைபிரிவு அமைப்பதாக சட்ட அறிவிப்பு பெறப்பட்டுள்ளது. மேற்படி புகார் குறித்து விரிவான விசாரணை மேற்கொண்டு உண்மை தன்மை அறிந்துகொண்டு அதன் அடிப்படையில் இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

உறுப்பினர் செயலர் /இணை இயக்குநர்
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்
கோயம்புத்தூர்

**இணைப்பு**
1. முத்திரையிட்ட வரைபடங்கள் - 4
2. நிபந்தனை படிவம் - 4
3. சாலை ஒப்படைப்பு அசல் பத்திரங்கள்

1. பெறுநர்
செயல் அலுவலர்
கண்ணம்பாளையம் பேரூராட்சி
சூலூர் வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்

**2. நகல் : (உள்ளாட்சி வழியாக)**
திரு. சுப்ரமணியன்
VIP Estate LLP
71, வடக்குகாடு, திருமங்கலம் அஞ்சல்
திருச்செங்கோடு வட்டம்
நாமக்கல் மாவட்டம்.

3. இருப்புகோப்பு (வரைபடம் -1 மற்றும் நிபந்தனைகள் - 1)
4. கோப்பு (வரைபடம் -1 மற்றும் நிபந்தனைகள் - 1)

நகல்
TamilNadu Real Estate Regulatory Authority,
No.1A, Ist Floor,
Gandhi Irwin Bridge Road,
Egmore, Chennai - 600 008.

கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை
முன்னிலை : திருமதி.க.புவனேஸ்வரி

நி.மு.எண்.775/2018 நாள். 19.11.2021

பொருள்:- மனைப்பிரிவு அங்கீகாரம் – கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் கண்ணம்பாளையம் பேரூராட்சி க.ச. எண். 123/1எ,124/2ல் உள்ள 12.31 ஏக்கர் பரப்பளவில் உள்ள நிலத்தினை மனைப்பிரிவு அமைக்க திட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது – நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கி உத்தரவு பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை:- 1). திரு.எம்.சுப்பிரமணியன், 7, வடக்கு காடு, திருமங்கலம் அஞ்சல், திருச்செங்கோடு வட்டம். நாமக்கல் என்பவது விண்ணப்பம். நாள். 20.12.2018,
2). உறுப்பினர் செயலர்/இணை இயக்குநர், உள்ளூர் திட்டக்குழுமம், கோவை அவர்களின் கடிதம் ந.க.எண்.6661/2018/உதிகு, நாள்.08.01.2019.
3). நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.966/2019/TCP-3. நாள்.24.12.2020.
4). சூலூர் சார்பதிவக தானபத்திரம் எண். 6064/2021 மற்றும் 6065/2021, நாள்.20.04.2021.
5). நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.966/2019/TCP-3. நாள்.04.05.2021.
6). உறுப்பினர் செயலர்/இணை இயக்குநர், உள்ளூர் திட்டக்குழுமம், கோவை அவர்களின் கடிதம் ந.க.எண்.6661/2018/உதிகு, நாள்.15.07.2021.
7). தனி அலுவலர், கண்ணம்பாளையம் பேரூராட்சி அவர்களின் முன் அனுமதி நாள்.19.11.2021
8). கண்ணம்பாளையம் பேரூராட்சி செலுத்துச்சீட்டு எண்.1162/2021-22. நாள்.19.11.2021.

-------------

கோயம்புத்தூர் மாவட்டம் கண்ணம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட க.ச. எண். 123/1A மற்றும் 124/2ல் உள்ள 12.31 ஏக்கர் பரப்பளவில் மனைப்பிரிவு அமைக்க பார்வை 1–ல் காணும் மனுதாரரால் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில், உறுப்பினர் செயலர், கோவை உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு, உத்தேசம் பரிசீலிக்கப்பட்டதில் , பார்வை 3ல் காணும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் மேற்படி உத்தேச மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது இடங்களை, வரைபடத்தில் கண்டுள்ளபடி பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்து தானக்கிரயப்பத்திர நகல் அனுப்பிவைக்க தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை 4–ல் காணும் சூலூர் சார் பதிவக தானக்கிரயப் பத்திரம் எண்.6064/2021 மற்றும் 6065/2021, நாள்.20.04.2021–ன்படி மேற்படி உத்தேச மனைப்பிரிவில் , திட்ட அனுமதியில் தெரிவித்துலுளபடி சாலைகள், பூங்காக்கள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் இப்பேரூராட்சிக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து, பார்வை 5–ல் காணும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின்கடிதத்தின்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ./ந..இ.எண்.107/2021 என எண்ணிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை 6 ன்படி உறுப்பினர் செயலர்/ இணை இயக்குநர், கோவை உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் செயல்முறை ஆணையில் இம்மனைப்பிரிவிற்கு 265/2021 என எண்ணிடப்பட்ட திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் , தார்சாலை, வடிகால் மற்றும் இதர அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளது. பார்வை 7–ல் காணும் முன் அனுமதியில் இம்மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்க, தனி அலுவலரின் முன் அனுமதியும் பெறப்பட்டுள்ளது. மேலும் பார்வை 8ல் காணும் இவ்வலுவலக செலுத்துச்சீட்டு எண்.1162/2021-22. நாள்.19.11.2021ன்படி அபிவிருத்திக்கட்டணம், காலியிட வரி மற்றும் ஆய்வுக்கட்டணம் ரூ.235604/- செலுத்தப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் கண்ணம்பாளையம் பேரூராட்சிக்கு உட்பட்ட க.ச. எண். 123A மற்றும் 124/2ல் 12.31 ஏக்கர் பரப்பளவில் மனைப்பிரிவு அமை... பார்வை 6-ல் கண்டுள்ள, உறுப்பினர் செயலர் (பொறுப்பு) கோவை உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களது உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள 1 முதல் 5 வரை மனைப்பிரிவு பொது நிபந்தனைகள் மற்றும் 1 முதல் 13 முடிய உள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டும், கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும், மனைப்பிரிவு அங்கீகார வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. அங்கீகாரம் பெறப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் மனையிடத்தில் பொதுமக்களின் பார்வைக்கு தெளிவாகத் தெரியும் வகையில் 6 X 4 அளவுள்ள நிரந்தர அறிவிப்பு பலகை வைக்கப்படல் வேண்டும்.
2. இம்மனைப்பிரிவில் உள்ள மனைகள் விற்பனை செய்யும்பொருட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரயம்செய்யப்படும்பொழுது , கிரயப்பத்திரத்தின் ஒரு அங்கமாக வரைபட நகலையும் இணைத்து கிரயம் செய்துகொடுக்கப்படவேண்டும்.
3. இம்மனைப்பிரிவில் உள்ள மனைகள் விற்பனை செய்யப்படும்பொழுது காலிமனையிடவரி செலுத்தியது குறித்த விவரம் கிரயப்பத்திரத்தில் குறிப்பிடப்படவேண்டும்.
4. இம்மனைப்பிரிவில் கண்டுள்ள மனைகள் விற்பனை செய்யப்படும்வரை மனை உரிமையாளரால் காலிமனைவரி ஆறு மாத காலத்திற்கு ஒரு முறை பேரூராட்சியில் செலுத்தப்படவேண்டும். மேலும் விற்பனை செய்யப்பட்டபின்பு இம்மனையில் கட்டிடம் கட்டும்வரையில் ஆறு மாத காலத்திற்கு ஒரு முறை பேரூராட்சி அலுவலகத்தில் காலிமனைவரி செலுத்தப்படவேண்டும் எனவும் மனை உரிமையாளருக்கு தெரிவிக்கப்படவேண்டும்.
5. மனைப்பிரிவு உரிமையாளர், மனைப்பிரிவு வரைப்படத்தில் குறிப்பிட்டுள்ளபடியே மனைகள் விற்கப்படவேண்டும். விதிமுறைகளுக்கு முரணாக ஒரு மனையிடத்தை பகுதியாக பிரித்து விற்பனை செய்யக் கூடாது.
6. இம்மனைப்பிரிவில் தெருவிளக்கு மற்றும் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி முதலான அபிவிருத்திப்பணிகள் மனைப்பிரிவு உரிமையாளரால் மேற்கொள்ளப்படவேண்டும்.
7. இம்மனைப்பிரிவில் மனுதாரால் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்திப்பணிகளில் குறைபாடுகள் ஏதும் கண்டறியப்பட்டால் மனைப்பிரிவு உரிமையாளர் நிபந்தனைகள் ஏதும் இன்றி தனது சொந்த செலவில் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

ஒ.ப 19/11/21
செயல் அலுவலர்
கண்ணம்பாளையம் பேரூராட்சி

19/11/21

**இணைப்பு**: 1) மனைப்பிரிவு நிபந்தனைகள் 1 முதல் 13 வரை
2) மனைப்பிரிவு வரைபடம்.

பெறுதல்:

திரு.எம்.சுப்பிரமணியன்
தி/ள்.வி.ஐ.பி.எஸ்டேட், எல்.எல்.பி.
71,வடக்குகாடு, திருமங்கலம் அஞ்சல்
திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.

நகல் :

1). உறுப்பினர் செயலர்(பொறுப்பு) , கோவை உள்ளூர் திட்டக்குழுமம் கோவை-12 அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பிவைக்கப்படுகிறது.

2). சார்பதிவாளர், சூலூர் சார்பதிவாளர் அலுவலகம் ,சூலூர். பத்திரப்பதிவு மேற்கொள்ளும்பொருட்டு தகவலுக்காக அனுப்பிவைக்கப்படுகிறது.